வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே,


# இந்துசாதனம்

யாழ். சர்வதாரி ஞூ தை மீ அ உ வெள்ளிக்கிழமை


## யாழ்ப்பாண நகர பரிபாலனம்

யாழ்ப்பாணப் பட்டின பரிபாலனசபை முறைமாறி. இந்த 49-ம் ஆண்டு தொடக்கம் இங்கே நகரபரிபாலனசபைமுறை ஆரம்பிக்கப்படலாயிற்று; இந்தச் சந்தர்ப்பத்தில் "ஏர்பன் கவுன்சில்" எனப்பட்ட யாழ்ப்பாணப் பட்டினசங்க பரிபாலன முறையைப் பற்றிச் சிறிது எடுத்துக் காட்டுவது உசிதமாகும்; யாழ்ப்பாணப் பட்டினசங்க பரிபாலனம் ஆரம்பத்திலே இப் பட்டினத்திற்குப் பல நன்மைகளைச் செய்வதுபோற் காணப்பட்டதெனினுங் காலஞ் செல்லச் செல்ல, அப்பரிபாலனம் பட்டினவாசிகளாற் பல காரணங்களையிட்டு வெறுக்கப்படலாயிற்று. குறித்த சங்கப் பரிபாலன காலத்திலே சிலவினுஞ் சில திருத்தங்கள் இப் பட்டினத்திற் செய்யப்பட்டனவென்பது நிசமெனினும், ஆவசியகஞ் செய்யப்படவேண்டிய பல திருத்தங்கள் அலட்சியஞ் செய்யப்பட்டன வென்பதும் நிசமாகும்.

காலந்தோறும் இந்தப் பட்டினத்திலே குடி சனங்களும் சஞ்சாரஞ் செய்வோரும் அதிகப்பட்டு வந்தாராகவும், இப்பட்டினத்திற்காகிய விசேஷ சுகாதார சௌகரியங்களைப் பட்டினசங்கத்தார் செய்திலரென்பது பட்டின வாசிகளும் இப்பட்டினத்தில் வந்து சஞ்சரித்துச் செல்வோரும் அறிந்த இரகசியங்களுள் ஒன்றாகும்; பல்லாயிரக் கணக்கான மக்கள் பற்பல காரணங்கள்பற்றி இப் பட்டினத்திற்கு வந்து போகின்றனரெனினும் ஆவசிய கருமத்தை முடித்தற்காகிய மல கூடங்களை இன்னும் இப்பட்டின வீதிகளிலோ இல்லையேல் அணித்தான இடங்களிலோ காண்டலரிது; ஒன்றிரண்டு இருந்தாலும் அங்ஙனமுள்ள மலசல கூடத்திலே தண்ணீர் கிடையாதெனலாம்; இங்குள்ள குறுக்குத் தெருக்களும் ஒழுங்கைகளும் அசுசியோடு கூடியிருப்பதற்குப் பிரதான காரணம் போதிய பொது மல கூடங்கள் இப்பட்டின எல்லையுள் ஆங்காங்கு காணப்படாமையாகும்.

அடுத்த விஷயம், இப்பட்டின சங்கத்தார் இட்டுவந்த வெளிச்சமாகும். ஆரம்பத்திலே பட்டின பரிபாலன சங்கத்தினர் தாமாகவே இங்குள்ள இல்லங்கள் கடைகள் படக்காட்சிச் சாலைகள் உத்தியோகத் தானங்கள் வித்தியா சாலைகள் முதலிய சகல இடங்கட்கும் வெளிச்சமுதவச் சம்மதித்தனர்; யாழ்ப்பாணப் புகையிரத ஸ்தானம் மாத்திரம் அந்த நேரத்தில் இவர்களுடைய வெளிச்சத்தை ஏற்றுக் கொள்வதற்குப் பின்னின்றது; இப் பட்டின சங்கத்தின் மின்சார அலையை நம்பித் தொழிற்சாலைகளி லுள்ளாரும் இங்குள்ள பிரதான அச்சியந்திர சாலையினரும் அந்த அலைவாயிலாகத் தங்கள் யந்திரங்களை இயக்கித் தொழில் நடத்தி வருவாராயினர்; கருமங்கள் இனிது நடைபெற்றன; இற்றைக்கு இரண்டு வருடந் தொடக்கமாக மின்சார அலை யியக்கம் அது வாயிலாகப் பெறும் வெளிச்சங் காற்று என்னுமிவைகளெல்லாம் கிரமமாக வராதொழிந்தன; இதனல் இவற்றை நம்பிக் கருமஞ் செய்து வந்தார்க்கும் பெரும் நஷ்டமும் இடையூறுகளும் நேரலாயின. இவற்றின் காரணமென்னவென ஆராய்ந்த விடத்தில், பட்டின சங்கத்திற்குரிய மின்சார சக்தியை நிர்வகித்து இயக்குவோர்க்கும் பட்டினப் பிதாக்களுட் சிலருக்குமிடையே நேர்ந்த பிணக்கென அந்நேரத்தில் அறியக் கிடந்தது. ஆனல், அப் பிணக்குக்கள் ஒழிந்தும் வெளிச்சமும அலையும் கிரமமாக இன்றும் வந்தபாடில்லையாகும்; இதனற் பட்டின வாசிகள் பல்லாற்றனும் படும் இடைஞ்சல் சொல்லுந்தரத்ததல்ல. தொகுத்துக் கூறுங்கால் சென்ற வருடத்தோடு ஒழிந்த பட்டின சபைப் பரிபாலனத்தைக் காட்டிலும், அதற்கு முந்தி யாழ்ப்பாணப் பட்டினத்தில் நடைபெற்றுவந்த சுகாதார சங்க பரிபாலனம் உத்தமமானது என்று முதியோர் சொல்லுகின்றமை நிசமெனலாம்; "கழிந்ததைவைதானிரங்கான்" என்றபிரகாரம்போனதையிட்டுக் கவலைப்படுதலால் ஆவதில்லை.

இவ்வாண்டிற் புதிதாய் ஏற்பட்ட நகர பரிபாலன முறையில் இந்நகரத்திலே செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்கள் விருத்திகளெவை யென்பதையிட்டு ஆராய்வோம்; மோதகம் கொழுக்கட்டையான வாறு, பழைய பட்டின சங்கத்தை நிர்வகித்து வந்தவருட் பலர் இந்நகரசபையிலே உத்தியோகத்தர்களாகவும் அங்கத்தவர்களாகவுமிருத்தலாயினர்; இப்புதியசபை நகரசபையென்று பேரளவில் மாத்திரம் இருந்துவிட்டாற் போதாது; இதனல் இப்பரிபாலனத்தை உடனே கொழும்பு நகரசபை போலத் தொடங்கி நடத்த வேண்டுமென நாம் சொல்ல வரவில்லை; கொழும்பு நகர் இப்பொழுதிருக்கும் பூரண நிலைமையையடைதற்குப் பல வருடங்கள் கழிந்தன; மேலும் கொழும்பு நகருக்குரிய பொருளாதார நிலையை யாழ்ப்பாண நகர் எக்காலத்தாயினும் அடையுமோ என்பதும் யோசிக்க வேண்டியது; இந்நகர சபை ஆரம்பிக்கும் இந்த நேரத்திலேயே, மத்திய ஸ்தல ஸ்தாபன அரசினரிடம் கடன் வாங்க யோசிக்கிறது; ஆதலாற் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்களைக் காலத்திற்கேற்ப, நகரவாசிகளின் பொருளாதார நிலைக்கேற்ப, வட இலங்கையில் வசிக்கும் மக்களின் கொள்கைகட் கேற்ப எதனையும் ஆராய்ந்து காலகதியிற் செய்யத்தான் வேண்டும்; ஆனற் செய்வதை ஸ்திரமாகவே செய்து நிறைவேற்ற வேண்டும். ஆரம்ப சூரத்துவமும், அகச்சுவரிருக்கப் புறச்சுவர் தீற்றுவதும் அநுகூலமான செயல்களல்ல; பிரதான கருமங்களைநகரப்பிதாக்கள் தங்களைத் தேர்ந்தனுப்பிய நகரவாசிகளோடு; வட்டாரந் தோறும் காலத்திற்குக் காலம் கூட்டங் கூட்டிக் கலந்து யோசித்துச் செய்தால், நகரப் பிதாக்களுக்கும் நகரவாசிகளுக்குமிடையே பரஸ்பரம நம்பிக்கையும் அன்பும் உண்டாகும்.

இந்நகரசபையினர் முதன் முதற் செய்யவேண்டியது, பட்டினத்திற்கு உதவப்படும் வெளிச்சம் மின்சார அலை என்னுமிவற்றை எந்த நேரமும் தொழிற்படச் செய்தலும், பட்டினத்திலோ இந் நகரிலோ வேண்டிய இடங்கட்குப் பஞ்சமின்றி வெளிச்சம் அலையென்னும் இவற்றைக் கிரமமாக வழங்குவதுமேயாகும்; அடுக்கச் செய்யவேண்டியது பட்டினத்தின் சுகாதாரத்தைப் பாதுகாத்தலும் நகரைப் பல்லாற்றனுஞ் சுத்தி செய்தற்கும், வேண்டிய வேண்டிய பகுதிகளில் நகர வாசிகட்குக் குடிக்கவும் சமைக்கவும் சுத்த நீர் உதவுவதுமேயாகும்; இவைகளெல்லாவற்றுள்ளும் நகரப் பிதாக்கள் பிரதானமாக அவதானிக்க வேண்டியது, முந்திய பட்டின சபையில் நேர்ந்த பிரகாரம் தங்களுட் பிரிவினை நேராமல், எல்லாரும நகரத்தின் நலத்தை உத்தேசித்து ஐக்கியப்பட்டு உழைத்து வருதலேயாம்.

## யாழ்ப்பாணம் நகர சபை

### முதலாவது கூட்டம்

சென்ற சனிக்கிழமை யன்று யாழ்ப்பாண நகரசபையின் முதலாவது கூட்டம் நகர மேயர் திரு. ஸாம். ஏ. சபாபதியின் தலைமையில் நடைபெற்றது.

மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுவதாகவும், அதைச் சமாளிக்க இப்பா துள்ள யந்திரங்களுக்குப் போதிய சக்தியில்லாதிருப்பதால் புதிய யந்திரமொன்றை இணைப்பதற்கான நடவடிக்கைகள் உடனே எடுத்துக்கொள்ள வேண்டுமெனவும் திரு. டி. எஸ். துரைராஜா ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

குறித்த தீர்மானம்பற்றி அவர் பேசுகையில், மின்சார விநியோக நிலைமை திருப்திகரமாயில்லை என்பது யாவருமறிந்த விஷயமாகுமெனவும், நடைமுறையில் நிலைமை இன்னும் மோசமாகிவிடுமெனவும் புதிய யந்திரம் இணைக்கப்பட்டால் அதன்மூலம் நகரசபைக்குத் தக்க வருவாய் கிடைக்குமெனவும், இல்லையானல் சொத்து வரியை உயர்த்தவேண்டிய அவசியம் ஏற்படக்கூடுமெனவும் தெரிவித்தார்.

மேயர் பேசுகையில், காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையிலிருக்கும் யந்திரங்கள் ஏப்ரல் மாதத்திலிருந்து வேலைசெய்ய ஆரம்பிக்குமெனவும் அவைகளால் மின்சார விநியோகம் செய்ய முடியுமெனவும், ஆனல் இதுவரை சர்க்கார் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லையெனவும் தெரிவித்தார்.

மேலும் விவாதம் நடைபெற்றபின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் வெவ்வேறு நிரந்தரக் கமிட்டிகளுக்கு அங்கத்தினர்கள் தெரிவு செயயப்பட்டனர்.

# - உலகம் பலவிதக் கதை -

(முற்றொடர்—25)

"உறங்குவலொன்றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வி ...."

"என்? மகளே, கவலைப்படுகிறாய்; உன்னுடைய முகம் எக்காலத்திலும வாடியிருப்பதைக் கண்டதில்லையே; சந்தோஷமாக இருக்கவேண்டிய காலத்திற் கவலையேனடியம்மா! படித்த உனக்குக் கவலைநேரக் காரணமில்லையே; "உறங்கவலொன்றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வி ...." என்று உன்னைப்போலப் படித்த பிள்ளைகள் சொல்லக் கேட்டிருக்கிறேன், இப்பொழுது நேர்ந்த சஞ்சலமென்னவென்பதை நான் அறியலாகுமா? மகளே." என்று ஒன்றுமறியார்போல் வினவினர் முருகரம்மான்; பத்மாவதி தன் கண்ணீரை முன்றானையால் ஒற்றித் தன்னைத் தானே தேற்றிக்கொண்டு முருகரைப் பார்த்து "அம்மான் கல்வியில் படித்தவர் படியாதவர் என்ற பேதம் பார்க்குமா, அது என்னைத்தான் தப்ப விட்டது; ஆனை தானே தன்கையால் மணலை வாரியள்ளித் தன் தலையில் இடுவதுபோல, அம்மான், நானும் என் வாயினுல் எனக்குச் சஞ்சலத்தைத் தேடிக்கொண்டேன்" என்று மீளவுங் கண்களில நீர் ததும்பச் சொன்னள்; "மகளே; கவலைப்பட வேண்டாம், அப்படியென்ன சஞ்சலம் உனக்கு நேரப்போகிறது; நீ என்ன படியாத பெண்ணு, அறிவில்லாத கன்னியையா, புத்தி கெட்ட பிள்ளையா, நீ ஒருபோதுஞ் செய்யத் தகாத பிழையைச் செய்யமாட்டாய், நடவாத முறையில் நடக்க உடன்படாய், அப்படியேதுஞ் செய்தாற்றானே பிழை, ஒரு பிழையுமில்லையடியம்மா, அந்த முருகனும் இந்த முருகனும் இருக்க உனக்கென்ன கிலேசம், பயப்படாமல் உள்ளதைச் சொல்லடியம்மா" என்று பரிவுடன் வினவினர் முருகரம்மான்; "அம்மான், முதற் கடவுள், இரண்டாவது நீங்கள்தான் எனக்குத் தஞ்சம், என்னுள்ளக் கவலையை உலகமறிந்த உங்களுக்கு முறையிடுவதல்லாமல் வேறு யாரிடஞ் சொல்லுவேன்; அம்மான், உண்மையைச் சொல்லுகிறேன், என்னை வசாதிர்கள்; என் பெற்றோருக்கும் இந்த இரகசியத்தை நான் இன்னமும் வெளியிடத் துணியவில்லை; உள்ளதைச் சொன்னல், அதற்கான உபாயத்தை நீங்கள் சொல்லுவீர்களென்ற எண்ணித்தான் உங்களுக்கு முறையிடுகிறேன; எங்கள் அருமையான அம்மான், வேறொருமல்ல, அவர் இடையிடையே இங்கு வந்து அனேகமும் ஆதரவோடும் என்னுடன் வார்த்தையாடிவிட்டுப் போவதுண்டு; ஒருநாள் நாங்களிருவரும் வார்த்தையாடிக்கொண்டிருக்கும் போது, நான்தான் என் பெண் புத்தியினலே, அவர் சொன்னதற்கு எதிராகப் பேசிவிட்டேன; அவர் அன்பற்ற என் பேச்சை இரண்டு மூன்று முறை கேட்டுச் சகித்துக்கொண்டு இதமாக வார்த்தையாடினர்; நான் அது எனக்கு வெற்றியென்று என் கல்விச் செருக்குக் காரணமாக எண்ணி அவருடைய உள்ளஞ் சுடும்படி ஏதோ பிதற்றிவிட்டேன்; அவர் அப்பொழுதும் என்னிடத்தில் வெறுப்புக் காட்டாதவராய் விடைபெற்றுக் கொண்டு மெல்லப் போய்விட்டார்; அம்மான், அன்று போனவர்தான இரண்டு மாசங்கள் வகையிற் கவலையோடு கழிந்தன; இற்றைவரை அவர் இந்தப் பக்கம் வரவுமில்லை; எனக்கொரு கடிதமேனும் எழுதவில்லை; இதுதான் அம்மான எனக்கு நேர்ந்த நிரக்கவலை, நான் செய்த அபசாரத்தை என் பெற்றோர் உற்றோருக்கு வெளியிட்டால், அவர்களும் என்னையே குறைசொல்வரென்று பயந்து உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பாத்தியைப்போல, இரகசியமாக வைத்துக் கொண்டு கவலைப்பட்டேன்; நீங்களும் இந்தப் பக்கம் வரவில்லையேயென்று துயரப்பட்டுக்கொண்டிருந்தேன்; தெய்வம் என் கவலைக்கிரங்கி உங்களை இங்கே கொண்டுவந்துவிட்டது" எனப் பரிவுகூரச் சொல்லி முடித்தாள் பத்மாவதி.

### "பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்"

பத்மாவதி இப்படி யெல்லாஞ் சொல்லக் கேட்ட முருகர் அவளிடத்திற் பரிவு கொண்டாராய், "மகளே, நீ எதற்குங் கவலைப்படாதே, இது கோபமல்ல. மனஸ்தாபமல்ல, காதல சிறுவருக்கிடையே நேர்ந்த ஊடல்; ஆனல் அந்த ஊடல் சற்று எல்லை கடந்து பிணக்காக மாறிவிட்டதென்று தான் எண்ணக் கிடக்கின்றது; நீயும் சிறிது எல்லை கடந்து பேசிவிட்டாய் போற் புலப்படுகிறது, பெண்கள் பேசும்போது அவதானமாகப் பேசவேண்டும்; சொற் சோர்வுபடவொண்ணுது; "பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமிதானதிரும்" என்று சொல்லுவார்களே, உன் காதலன் சற்று மனக்கிளர்ச்சியோடு பேசினல, நீ தன்மையோடு பேசுவதல்லவோ முறை; பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல் என்றுபடிக்கவில்லையா? சரி, நடந்ததையிட்டு இரங்கி ஆவதென்ன! போனவைபோக, இனியேனும புத்தியாய் நடக்கவேண்டும்; நீ கவலைப்படாதே; நானே நேரில் அந்த ஆளிடஞ்சென்று சமாதானப்படுத்தி இங்கு உன்னிடம் அழைத்துவருகிறேன்; இந்தக்கருமத்தை இக்கணம முடிவதற்கிடையில் நிறைவேற்றிவைப்பேன்' என்று தேறுதல் சொல்ல, பத்மாவதியும் மனந்தேறி "அம்மான், நீங்களதாம் அப்படிச் செய்துவைக்கவேணும்; இந்த நன்றியை மரணபரியந்தம் மறவேன்" என்ருள்; முருகர் இங்ஙனம் தேறுதல் சொல்லிவிட்டுப் பத்மாவதியிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு மீண்டார்.

### 'நல்லார் செயுங் கேண்மை நாடோறும் நன்ருகும்"

பத்மாவதியின நிலை இங்ஙனமாக, மோகனு தங்கள் வீட்டிற்கு மீண்டுவந்த தன் காதலனுகிய கேசவனையும் அவனுடன் வந்த பாஸ்கரனையுங் கண்டு மகிழ்ச்சிகொண்டு பெரிதும் உபசரித்தாள்; பாஸ்கரன் தங்கள் வீட்டிற்கு வருவானென்று மோகனு கனவிலுமெண்ணியிருந்திலள்; பாஸ்கரன் வரலைக் கண்ட மாத்திரத்தில் அவளுடைய உள்ளத்தில எழுந்த மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையில்லையெனலாம; பத்மாவை வெறுத்த பாஸ்கரன அந்தநேரத்திலே தன்பொருட்டே அங்கே வந்தானென்று அவள்விபரீதமாக எண்ணிக்கொண்டாள்; "எங்களையும் பொருட்படுத்தி இங்கு வந்தீர்களே, தங்களுக்கு நாங்கள் என்னபதில செய்யப்போகிறோம்" என்று மோகனு தன்மைகூரக் கூறுதலும, பாஸ்கரன "ஆரை மறந்தாலும், எதனை மறந்தாலும, உங்களையும நீங்கள் செய்த நன்றியையும சாகுமட்டும் மறப்பேனு; நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்ருகும்" என்று பெரியோரும் கூறியிருக்கிறர்கள்ல்லவா" என இதமாகச் சொன்ஞன்; பாஸ்கரன் வஞ்சகமின்றிப் பேசிய இதமான வார்த்தைகள் மோகனுவின் உள்ளத்தைப் பேதித்துவிட்டன; பிரயாணஞ்செய்த சிரமந்தீர, மோகனு கேசவனையும் பாஸ்கரனையும் ஆர்வத்தோடு உபசரித்து அவர்களை முதல் ஸ்நானஞ் செய்யச்செய்து, சற்றுநேரஞ் சென்றபின் அன்புடன் ஆகாரம் பரிமாறி உண்ணச் செய்தாள்; பிரயாணச் சிரமந் தீர்த்தபின் கேசவன் பாஸ்கரனை நோக்கி "ஐயா, இனி நான் செய்யவேண்டியதென்ன சொல்லுங்கள்" என்று வினவுதலும், "நீ செய்யவேண்டிய தொன்றுமில்லை" என்று பாஸ்கரன் பதில் சொல்ல, மோகனு புன்னகையரும்ப, "இனி நீங்கள் போய், ஐயா இங்கே வந்திருக்கிறரென்பதைப் பத்மாவதியம்மாளிடம் தெரிவிக்க வேண்டியதுதான்" என்று கேசவனுக்குச் சொன்னள்.

### தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்

"அப்படியானல் இப்பொழுதே இந்த இடத்தையும் விட்டுப் போய்விடுவேன்" என்றன் பாஸ்கரன், "அப்படியொன்றுஞ் செய்யவேண்டாம. உங்கள் சம்மதமில்லாமல் நான் எதனையும் செய்யமாட்டேன்" என்ருன் கேசவன்; 'ஐயா, பெண்ணுப் பிறந்த நான் சொல்லுகிறேனென்று குறைவெண்ணுதீர்கள்: தண்ணீரும் மூன்று பிழை பொறுக்குமென்று சொல்லுவார்கள்; பத்மாவதியும் என்னைப்போல் ஒரு பெண் பேதைதான்; எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும பெண்புத்தி பேய்ப்புத்தி என்று ஆண்பிள்ளைகளாகிய நீங்கள் தாமே எங்களைப்பற்றிச் சொல்லுகிறீர்கள் பெண்கள் தங்கள் பேதைமையினுற் செய்யும் பிழையொன்றிரண்டைப் பொறுத்தல்லவோ உங்களைப்போன்ற குடியிற் பிறந்தவர்கள் செய்யவேண்டியது. படித்த உங்கள்முன்னிலையிற் பெண்பேதை ஏதும் பேசப் பயப்படுகிறேன்; குற்றம் வந்தால் பொறுத்துக்கொள்ளுங்கள்; அந்தக் காலத்திலே தருமனையும் இந்தக் காலத்திலே காந்தி மகானையும் பொறுமையிற் பெரியனென்று உலகம் பாராட்டுகிறதே! அப்படியான பொறுமையை நீங்களுமபின்பற்றுவதென்ன" என்று வாக்குவன்மையும் கனிவும் விரவச்சொன்னுள்மோகனு. அவள் அவ்வளவு நுட்பமாகப் பேசக்கூடியவளென்பதை முந்தியறியான் பாஸ்கரன். அவள் சொன்னவற்றிற்குப் பதில் சொல்லமுடியாதவனுய் அவன் மௌனஞ் சாதித்தான. அவன் சற்றுநேரம் யோசித்துவிட்டு மோகனுவைப் பார்த்து "மோகனு இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் நீ தலையிடாதே; வேறு எதனைச் செய்யச் சொன்னுலும் உன்பொருட்டு நான் செய்வேன்" என்று உறுதியாகச் சொன்னன்; "ஏதோ, ஐயா உங்கள் இஷ்டம் போற் செய்யுங்கள்; நான் உங்களுக்குச் சொன்னதை உடனே மறந்துவிடுங்கள்: உங்களைக் கேட்கத் துணிந்தது என்மேற்பிழை. அதையிட்டு துக்கப்படுகிறேன்" என்று சலிப்புடன் சொன்னுள் மோகனு; 'ஒன்றுக்கும் நீ கவலைப்படவேண்டாம; பத்மாவதியை வெறுத்து மறந்த நான, மோகனு நீ சொன்னதை மறக்க நேருஞ்செல்லுமா" என்று அவளுக்குச் சமாதானஞ் சொன்னுன் பாஸ்கரன். "ஐயா, நான் செய்யவேண்டியதென்ன" என்று மீட்டும கேசவன் கேட்க, "கேசவன், நீ ஒன்றும் செய்யவேண்டாம சும்மா இங்கேதானே இரு" என்ருன பாஸ்கரன். "ஐயா மீட்டுமீட்டும் கேட்கிறேனென்று கோபிக்காதீர்கள்; உங்களிடம் போய் உங்களைக்கண்டு தன் குறைகளைச் சொல்லி உங்களைச் சமாதானப்படுத்திக்கொண்டு வருவேன் என்று வாக்குச் சொல்லிவிட்டுப் புறப்பட்ட நான், இப்பொழுது பத்மாவதியிடம் போய் எதுஞ் சொல்லாமல் விடுவது முறையல்லவே; அவள் உங்கள் பதிலையும் என் வரவையும் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமல்லவா இருப்பாள்; இந்தச் சங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்" என்று கலக்கத்தோடு சொன்னுன் கேசவன்; "அப்படியானுல் கேசவன், நீ வேறொன்றுஞ் சொல்லவேண்டாம்; நான் பாஸ்கரனிடம் போய்ப்பேசினேன். அவன் ஒன்றுக்குஞ் சம்மதிக்கவில்லை" என்று அவளுக்குச் சுருக்கமாகவும் நிர்க்கமாகவுஞ் சொல்லிவிட்டுச் சீக்கிரம் மீண்டுவா" என அழுத்திச் சொன்னுன் பாஸ்கரன்; "நீங்களென்ன சிறுகுழந்தையா! மாவிலும் படாமல் மாங்காயிலும் படாமற் கல்லெறிவதுபோல், இப்போதைக்கு இந்த ஐயாவுங் கோபிக்காமல், பத்மாவும மனவருத்தப்படா

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## கடிதம்

கனம் இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கட்கு:

ஐயா!

நான், சென்ற சில வாரங்களாகச் சுகவீனமாக இருக்கும் எனது உறவினரொருவரைப் பார்க்கும் பொருட்டு யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்குக் கிழமையில் இரண்டு மூன்று தடவை சென்று வருகிறேன். அங்கு நான் கண்டுவரும் ஓர் பரிதாபகரமான காட்சி எனது மனதைப் பெரிதும் புண்படுத்துகிறமையின் அதனைத் தங்கள் பத்திரிகை வாயிலாக வெளியிடுவது மிகவும் நல்லுபகாரமாமெனக் கருதுகிறேன்.

ஆபத்தான நிலையிலிருக்கும் தமது இனத்தவர்களைப் பார்க்கும் நோக்கமாக நூற்றுக் கணக்கான மக்கள் நாடோறும் அங்கு வருகின்றனர். மூல்லைத்தீவு, மாங்குளம், பூநகரி, நெடுந்தீவு முதலாம் தூர இடங்களிலிருந்தும் வருகின்றனர். வருபவர் எல்லோரும் 'நோயாளரை, மத்தியானம் 12 மணிக்கும் 1 மணிக்கும் இடையிலும், மாலை 5 மணிக்கும் 6 மணிக்கும் இடையிலும் தான் பார்க்கலாம்' என்னும் வைத்தியசாலைப் பிரமாணத்தை நன்கு அறிந்தவரல்லர்.

காலை 6 மணிக்கு ஒருவர் வந்தாலும் மத்தியானம் 12 மணி வரையும் வாயிலில் காத்து நிற்கவேண்டும். பிற்பகல் 1 மணி 1 நிமிடத்திற்கு வந்தாலும் மாலை 5 மணி வரை பொறுக்க வேண்டும். நோயாளனைப் பார்க்கவேண்டும் என்னும் ஆவலோடு வருபவர் 6 மணித்தியாலமல்ல 6 நாட்களுக்கும் பொறுத்து நிற்பார். ஆனால் எங்கே நிற்பது? பிள்ளையைப் பார்க்கவந்த பெற்றோர் அவ்வாயிலை விடுத்து வேறெங்கேனும் போக விரும்புவாரா? பெற்றோரைப் பார்க்கவந்த பிள்ளை பெயர்ந்து வேறிடம் செல்வாரோ? கணவனைப் பார்க்க வந்த மனைவி அவனைப் பாராது அடியெடுத்து அப்புறம் செல்வாளா? மனைவியைப் பார்க்க வந்த கணவன் அவளைப் பாராது கடைப்பக்கம் திரும்புவானோ?

எனவே, பட்டியைத் திறக்கும் ஆட்டிடையன் கையை எதிர்பார்க்கும் ஆடுகள் போல, வாயிற்காப்போன் கையை எதிர்பார்த்து, கீழே நார்கட்டாலும், மேலே வெயில் சுட்டுப் பொசுக்கினும், மழைபெய்தாலும், பக்கத்தில் கார் அடித்தாலும் லொறி மோதினும், புழுப்போலத் துடித்துக்கொண்டு, வாயிலண்டையில் நிற்கும்மக்களைக் காணும்போது யார்தான் மனவருத்தம் கொள்ளார்? ஆஸ்பத்திரியி லுள்ள ஆபத்துக்காரர் மண்டபத்திலுள்ள நோயாளிகள் படும் அவஸ்தையிலும் இவர்கள்படும் அவஸ்தை குறைந்ததா? ஓர் கல்லையில் பாலனை வைத்து வெயிலில் நிற்கும் மங்கைபடும் பாடுசிறிதா? தண்ணீரின்றித் தாகில் நிற்கும் விருத்தர்படும் வேதனை எத்தகைத்து? என்ன கொடூரக்காட்சி.

வடபகுதியிலுள்ள ஓர் பெரும் வைத்தியசாலையில், இலங்கையின் இரண்டாவது பட்டணத்தின் ஆஸ்பத்திரியில் நோயாளனைப் பார்க்க வருவோர் வசதியாய்த் தங்கிச் செல்வதற்கு ஓர் தகுமண்டபம் இல்லை யென்றால், கேவலம் நாம் உடையில் மாத்திரம் மேனாட்டாரைப் ஒழுக்கத்திலும் சீர் பாகத்திலுமை யிலும் காட்டுமிராண்டிகளையும் பின்பற்ற வல்லேம் என்னும் துறகிய மனப்பான்மையை வெளிப்படுத்தவில்லையா?

இதுவிஷயத்தில் தாங்களும் பொது ஜனங்களும் கரிசனை எடுத்து, ஆவன செய்யுமாறு அன்பாய் வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையான
க. முத்துக்குமாரு.

## உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

மகிழக்கக்கூடிய விதமாகப் பதில் சொல்லிவிட்டு வர உங்களுக்குத் தெரியாதா? பத்மாவதியிடமபோய இப்பொழுது உங்களிருவருக்கும் கிரகநிலைகூடாதாம்; காலநிலைகலைலாம்நன்மைக்கு வருமாம்; என்று தொகுத்துச் சொல்லிப், பத்மாவதியின் மனத்தையும் ஆற்றிவிட்டு வாருங்கள். உங்களுக்கு இதுவும் நான் சொல்லித்தா வேண்டுமோ'' என்று சிறிது அதட்டிச் சொன்னான் மோகன. கேட்ட கேசவன் "மோகன, கோபிக்காதே என்னைக் குறை சொல்லாதே: நீசொன்னபடியே நான் போய்ப் பத்மாவதியிடஞ் சொல்லிவிட்டு வருகின்றேன்; நீ இந்த ஐயாவோடு பேசிக்கொண்டிரு'' என்று சொல்லிவிட்டுப் பத்மாவதியிட்டிற்குப் போவானாயினன். (வரும்)

## தேகவியோகம்

### திலகவதி

பிரபல நியாயதுரந்தரராயிருந்த வண்ணார்பண்ணை திரு. M. S. இளையதம்பி அவர்களின் புத்திரியும், இந்துசாதனத்திற் கடமையாற்றும் திரு. கி. சுப்பிரமணியமவர்களின் பிரிய பத்தினியுமாகிய ஸ்ரீமதி திலகவதியம்மாள் சென்ற வெள்ளிக்கிழமை(14-1-49) யன்று, சிலகாலமாகத் தம்மைப் பிடித்து வருத்திய நோய்காரணமாக, அகாலமரணமடைந்து தமது நாயகனில்லத்திற்றானே, தனது நாயகன் மக்கள் சுற்றம், ஊரார் அயலார் துயருற இவ்வுலக வாழ்வை யொருவினார்; ஈமக்கடன்கள் அடுத்த நாளாகிய சனிக்கிழமை மக்களாகிய யோகநாதன் சுதாகரனென்னும் இருவராலும் விதிப்படி செய்யப்பட்டன. இறக்கும்போது வயசு 27. இப்பெண்ணின் அகால மரணம் பரிதாபகரமானது. இவருடைய ஆன்மா சாந்தியடைக.

●

### முருகப்பர்—தம்பிஐயா

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் ஒழுங்கையைச் சேர்ந்த பிரபல மா வியாபாரியும், குத்தகைக்காரரும் வெள்ளாக்தெரு அங்குசபாச விநாயகராலய மானேஜருமான முருகப்பர் தம்பிஐயா அவர்கள் சென்ற வியாழக்கிழமை பகல் ஒரு மணியளவில் சிவபதமடைந்தார். அவர் தெய்வபக்தியும், பொதுச் சேவைகளில் சிரத்தையும் உடையவர். 58-வது வயதில் சிவபதமடைந்த அன்னாரின் பிரிவாற்று நிற்கும் மகன் நாகரத்தினம், மகள் சகாதேவர், மருமகன் நாகரத்தினம் ஆகியோருக்கும் ஏனைய சுற்றத்தவர்—அயலாருக்கும் எமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைக.

## டில்லி மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதி

இந்தியப் பிரதமர் பண்டித நேரு கூட்டும் மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாகத் திரு. பண்டாரநாயகா சென்ற செவ்வாய்க்கிழமை காலை விமானமார்க்கமாக டில்லிக்குச் சென்றனர். அவரோடு அவரது அந்தரங்கக் காரியதரிசியும், ஆலோசகராகத் திரு. சே. வைத்தியநாதனும் சென்றனர்.

## சைவத்திற் பொதுவுடைமையு முண்டா?

1-ம் பக்கத் தொடர்ச்சி

வினை, பிறவி, கடவுள் என்பனவற்றையுடன்படாத பொதுவுடைமைவாதிகளை மிகத் திட்பநுட்பமாக வாராய்ந்து ஒப்புக்கொள்ளவும் சித்தாந்ததோடு யாங்ஙனம் பொருந்தும்? இப்பொருத்து மாற்றைத்தாம் மிக நுட்பமாக அறிந்துகொண்டாரென்று முதலியார் எழுதுவதன் பொருள் என்னையோ? பொதுவுடைமையானது உலோகாயதத்தைப் பெரிதும் தழுவியதென்று அறிகவிற்றுனும் நுட்பம் யாண்டையது? அன்றி, மிக நுட்பம் யாண்டையது? "காண்பன வெல்லாம் அவையே போறலை'', என்பது போல முதலியாருக்கும் எல்லாம் சித்தாந்தமாயும் அவசித்தாந்தமாயும் தெரிகின்றன போலும்! நிற்க.

இனி, இக்கலவுலகின் மறுதலைப் போக்கிறகு மிக விணக்கமாகச் சித்தாந்தத்திலே பொதுவுடைமையின் அமைதியை, முதலியார், தமது அதி தீவிர சூக்கும விவேக சாதுரியத்தாற் கண்டாராகத் தென்னாட்டுச் சைவர் சிலர்போல யாழ்ப்பாணத்துச் சைவர் சிலரும், நாஸ்திகம் பேசும் வழக்கறவோர் சிலரும், மகிழ்ந்து தம்மைப் பெரிதும் மதிப்பார் ஆகலிற் கூறினோமென்க, கனறு, கனறு ஒரு சிலரை மகிழ்விக்கவும், தாம் போலிமதிப்புப் பெறவும் நினைந்து பொருந்தாப் பொய்மொழிதல் சான்றாண்மையாகாதென்க. அல்லதூஉம், பாழுங்கொள்கையாகிய பொதுவுடைமைக்கும் சுத்தாத்துவித சைவசித்தாந்தத் திருநெறிக்கும் ஒப்புமையாதல் ஒற்றுமையாதல் காண்டற்குத் துணியாரென்பது.

இன்னும், உலோகாயதத்தைத் தழுவியபொதுவுடைமையநுட்பட்ட எல்லாரையும் ஆசிரியர் திருவள்ளுவர் "சிற்றினம்'' என்றும், அன்னாரோடு அரசனுதல் குடிகளாதல் சேர்தல் கேடு தருமென்றும் மிகக்கடிந்து கூறுப. 'சிற்றினமாவது, கல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லெலன் போரும் விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு' என்று கூறுவர் பரிமேலழகர். இனித் தமிழ் நாட்டிலே சித்தாந்த சமய நெறிபொழுகும் தமிழர், நல்வினைப்பயனுற் செல்வராகப் பிறந்த வழி அன்பு கொண்டு பிறரைத் தாங்கி வரும் நிறமும் பொதுவுடைமையும் வேறு என்பது தெரிப்பாம்.

[வரும்]

## அரிசி அளவு அதிகரிக்குமாம்

### இரண்டுவாரங்களுக்குமட்டும்

அடுத்த திங்கட் கிழமை தொடக்கம் இரண்டு வாரங்களுக்கு ஒவ்வொரு அரிசிச் சட்டுப்பாட்டுப் புத்தகத்துக்கும் நாலுபடி அரிசி கூடுதலாகக் கொடுக்கப்படுமென உணவு மந்திரி திரு. ஏ. ரத்நாயகா தெரிவித்தார். கூடுதலாகக் கொடுக்கப்படும் அரிசி ஒரு படிக்கு 65 சதம் விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு வாரங்களும் கோதுமை மா விநியோகிக்கப்படமாட்டாதென்றும் கூடிய சீக்கிரத்தில் மா விநியோகிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கையின அரிசிக் கட்டுப்பாட்டளவு குறைக்கப்படமாட்டாதென்றும், உலகின பல பாகங்களிலிருந்து பெருந்தொகையான அரிசி விரைவில் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## சாவகச்சேரி பட்டின சங்க கிராமச்சங்கத் தலைவர்கள்

சென்ற புதன்கிழமை காலை திரு. வி. குரியகுமாரன் தலைமையில் சாவகச்சேரி பட்டினசங்கத்துக்கும், கிராமச்சங்கத்துக்கும் தலைவர்களும், உபதலைவர்களும் தெரிவு செய்யப்பெற்றனர்.

பட்டினசங்கத்துக்குத் திரு. எஸ். கே. திருநாயகம் தலைவராகவும் திரு எஸ். கந்தையாசிவம் உபதலைவராகவும், கிராமச்சங்கத்துக்குத் திரு. வீ. தியாகராஜா தலைவராகவும், திரு. சே. மயில்வாகனம் உபதலைவராகவும் தெரிவுசெய்யப்பெற்றனர்.

## திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

**சனி ஜனவரி 22**

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 அம்பலப்புழை பி கிருஷ்ணன்நாயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 கும்பகோணம் எஸ் சுவாமிநாதய்யர் வயலின் 8 30 காலை இசை * 9 முடிவு

1 கும்பகோணம் எஸ் சுவாமிநாதய்யர் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஆங்கிலப்பேச்சு 2 தமிழில் செய்திகள் 2 05 ஆங்கிலப்பேச்சு 2 15 ஐரோப்பிய சங்கீதம் * 2 45 முடிவு

மாலை 5 அம்பலப்புழை பி கிருஷ்ணன் நாயர் பாட்டு 5 40 ஆண்டாள் திருப்பாவை விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 கீழச்செவல்பட்டி எஸ் வெங்கடராமணராவ் ஜலதரங்கம் 7 15 வேலைதேடித்தரும் ஸ்தாபனம் பேச்சு 7 30 தமிழில் செய்திகள் 7 45 மஹாராஜபுரம் விச்வநாதய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப்பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 கீழச்செவல்பட்டி எஸ் வெங்கடராமணராவ் ஜலதரங்கம் 10 இசைவேலை * 10 30 முடிவு.

**ஞாயிறு ஜனவரி 23**

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை * 8 30 வி என் கிருஷ்ணமூர்த்திஐயர் வீணை 9 முடிவு.

12 ஆரம்பம் * 12 30 யமனுக்கு ரமன் நாடகம் 12 40 தசிபின்னம் லயக்கோலம் 12 45 காரணகாரியம் 12 55 அந்திய கோக்கினன் 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 இசைக்கதம்பம் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2 30 நீங்கள்கேட்டவை * 3 முடிவு.

மாலை 5 டி ஆர் நவநீதம் பாட்டு 5 40 தேவாரத்தை 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி என் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வீணை 7 30 தமிழில் செய்திகள் 7 45 புத்தக விமர்சனம் 8 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 8 30 டி. ஆர். நவநீதம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 சித்ரகானம்* 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 பாட்டும் அதன் கதையும் கதைப் பாட்டு 10.00 இசைவேலை * 10 30 முடிவு.

**திங்கள் ஜனவரி 24**

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 பாண்டமங்கலம் வ. ஸ்ரீநிவாசன் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதியபாடல்கள் 8 30 தஞ்சாவூர் எஸ். சீதாலக்ஷ்மி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 தஞ்சாவூர் எஸ் சீதாலக்ஷ்மி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 தஞ்சாவூர் எஸ். சீதாலக்ஷ்மி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 பாண்டமங்கலம் வ. ஸ்ரீநிவாசன் நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 ராமநாதபுரம் எம். என் கணேசபிள்ளை வயலின் 7 30 தமிழில் செய்திகள் 7 45 பணவீக்கத்துக்கு மருந்து 1 உற்பத்திப் பெருக்கம் —பேச்சு 8 திருவையாறு டி. வைத்தியநாதய்யர் பாட்டு 8 30 ராமநாதபுரம் எம் என் கணேசபிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9·15 ஆங்கிலத்தில் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 டியூனும், கிரிக்கெட் 10 இசைவேலை * 10 30 முடிவு

**செவ்வாய் ஜனவரி 25**

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 காரைக்குடி எம். மணிராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை* 8 30 என் ரமணி புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆர் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஆர் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 காரைக்குடி எம் மணிராஜன் பாட்டு 5 40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 நாளவாத்யக்கச்சேரி 7 30 தமிழில் செய்திகள் 7 45 கே எஸ் வெங்கடராமய்யா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 கே. வி. டே.* 9 30 லண்டனிலிருந்துசெய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 திருச்சி சுவாமிநாதய்யர் பாட்டு 10 நீங்கள் கேட்டவை* 10 30 முடிவு.


## தந்தரோக சஞ்சீவி கந்தசாமி வைத்தியர் சந்தனாதித் தயிலம்

**ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2**

ஒவ்வொருநாளும் ஒரு சதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்; புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும் வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல், இருமல் சுவாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சுடு முதல் எந்த வெக்காட்டிற்கும் பூச உடனேவேதனை தணியும். வி. பி. பி. மூலம் அனுப்புவோம். சிசா முதலிய செலவு வேறு. வெளிநாட்டிற்கு வி. பி. பி. இல்லை

விலாசம்:

ஆயுள்வேத
சிவசோதி மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

M 53 23-7-48—23-7-49 (வெ)


## நமது சோதிடப் பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (23—1—49——29—1—49 வரை)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

முதல் மூன்று நாட்களும் அவதானமாக நடந்துகொள்வீர்களானால், இவ்வாரம் சிறந்த வாரமாகவே இருக்கும், லாபம்—சித்தியடைவதற்கு இவ்வாரத்தில் உங்களுக்குச் சிறந்த சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள், ரோகிணி, மிருகசிரிடம் 1, 2

வாரத்தின் முன்னரைப்பகுதி பின்னரைப்பகுதியிலும் சிறந்ததாக இருக்கும், புதன்கிழமையின்பின் நிலைமைகள் தொந்தரவும் குழப்பமும் நிறைந்தனவாகவே காணப்படும். முக்கியமான மாற்றங்கள் எதுவுமேயின்றி நீங்கள் அதிக விஷயங்களில் தலையிட நேரிடலாம்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை புனர்பூசம் 1, 2, 3,

அவ்வளவு சிறந்த வாரமல்ல, குடும்ப சச்சரவுகளைத் தவிர்த்து, முயற்சியில் சிரத்தை காட்டவும், மாசிமாதம் முதல்வார முடிவுவரை நீங்கள் உங்கள் மனைவியிடமிருந்து சந்தோஷத்தை எதிர்பார்க்க முடியாது. மிதுனக் காதலர்கள் தங்கள் காதல் விவகாரங்களில் ஏதோ குறைகளைக் காணுவார்கள்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம் பூசம், ஆயிலியம்

இவ்வாரத்தில் முக்கியமான தீர்மானங்கள் செய்யவேண்டாம். தேகசுகம் காதல முதலியன சம்பந்தப்பட்ட நல்ல சந்தர்ப்பங்களிலும் பேசாதிருப்பதே நன்று. செலவைக் கட்டுப்படுத்தவும், சச்சரவுகளைத் தவிர்த்து நடக்க விரும்பின் கோபத்தை அடக்கி நடக்கவும்.

**சிங்கராசி** மகம் பூரம் உத்தரம் 1-ம பாதம்

இவ்வாரத்தில் நீங்கள் தொட்டுத் தொடங்கும் எந்த விஷயமும் உங்களுக்கு மிகச் சிறந்த பலன கொடுக்கக்கூடியதாக இருக்கும். புதன்கிழமை உற்சாகம் தரும் சமூகத் தொடர்புகள் ஏற்படும். வாரமுடிவில், காதல் விவகாரங்களில் அதிக நம்பிக்கை கொண்டிருப்பதையிட்டு எச்சரிக்கையாயிருக்கவும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம சித்திரை 1, 2-ம பாதம்

பணம் - கடன் சம்பந்தமான விஷயங்களில இவ்வாரம் மிக்கஆராய்வோடு நடக்கவும். வாகனங்களையிட்டு அவதானமாயிருக்கவும். வார முடிவில் காரியாலயத்தில் குழப்பங்களோ மன அமைதிக்குப் பங்கமும் ஏற்பட இடமுண்டு.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்

பணம் - பூமி சம்பந்தமான கஷ்டங்கள் ஏற்பட்டால், நிணக்கத்துக்கான வழிவகையில் நடந்துகொள்வதே புத்திசாலித்தனமாகும். இவ்வாரக்கில் நண்டர்களை அதிகநாம் நம்பவேண்டாம். அவர்கள் உங்களை ஏமாற்றக்கூடும்

**விருச்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம் கேட்டை

இவ்வாரத்தில் உங்கள் முயற்சி நல்லது பிரயத்தனங்கள் பலனளிக்கும் முறையில் முன்னேறும். இவ்வாரம் சம்பவங்கள் நிறைந்ததாயும், உயர்ந்த அந்தஸ்தி லுள்ளவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதாயுமிருக்கும். நீங்கள் எதைச் செய்தாலும் அது நீங்கள் சந்தோஷத்தையும் வெற்றியையும்கொண்டு முன்னேறுவதாகவேயிருக்கும்

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம 1-ம் பாதம்

முயற்சி-சமூக சம்பந்தமாக மிகச் சிறந்த வாரம். வாரத்தின்பின்னரைப்பகுதியில்தேசசுகம்நல்லதிருக்கும் சில சம்பந்தமான விஷயங்களுக்காகநீங்கள் அதிக நேரம் செலவுசெய்ய நேரிடும். பணத்தோடு சம்பந்தப்பட்ட விஷயங்களில் மாசிமாத முடிவுவரை முக்கிய தீர்மானங் கொளவேண்டாம்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4-ம பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

நிலைமைகள் யாவும் உங்களுக்குச் சாதகமாகவே இருப்பதைக் கண்டுகொண்டும் நீங்கள் மன அமைதியாக சாந்தியோ அற்றிருப்பீர்கள் வார முடிவில் தேக சுகத்தைப் பேணவும். நண்பர்களோடு அபிப்பிராயபேதங் கொள்ளவேண்டாம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம்பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

இவ்வாரத்தில் சொந்த விஷயங்கள் குழப்பமுள்ளனவாகவே காணப்படுகின்றன, வாரத்தின் முற்பகுதியில் பிரயாணஞ் செய்யவேண்டாம், காய்ச்சல் சளிப்பும், கண்ணில் சுகவீனமும் ஏற்படலாம் முடியுமானால் ஆறுதல் எடுக்கவும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

இவ்வாரத்தில் முன்னேற்றத்துக்குரிய மாற்றங்களும் வளர்ச்சியும் காணப்படுகின்றன பணமெ ய்துப்போதல் பண லாபங்கள், காரிய சித்தி, குடும்ப அமைதி யாகவுமுள்ள அறிகுறிகள் காணப்படுகின்றன.


## நல்ல செய்தி

எங்கள் மருந்துச்சாலையின் கிளை ஸ்தாபனம் ஒன்றை யாழ்ப்பாணம், கன்னாதிட்டி, கஸ்தூரியார் தெரு, 76/3-ம் நம்பர் கட்டடத்தில் திறந்துள்ளோம் என்பதைப் பொது ஜனங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

**விசேஷ அம்சங்கள்:**

1. எங்கள் சிகிச்சை முறைகள் முழுவதும் ஆயுர்வேத முறையை அடிப்படையாகக் கொண்டன.
2. எங்கள் மருந்துகள் எல்லாம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுவன.
3. எங்கள் தலைமை ஸ்தாபனத்திலேயோ அன்றிக் கிளை ஸ்தாபனத்திலேயோ நாட்பட்ட வியாதிகள் எவைக்கும் சிகிச்சை அளித்தும் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்
4. வாதம், பாரிச வாதம முதலிய நோய்களுக்குரிய மலையாள சிகிச்சை முறைகள் சிறந்த அநுபவஸ்தர்களால் கையாளப்படுகின்றன.
5. நோயாளர் எம்மிடம் சிகிச்சை பெற்றாலும் பெறவிட்டாலும் நாங்கள் எந்த வியாதியைக் குறித்தும் யோசனை சொல்வோம்.

ஆலோசனை நேரம்:

காலை 7 மணி முதல் 12 மணிவரை
பி. ப. 4 „ „ 7 „

**THE ARYA PHARMACY**

(128, புதிய சோனகதெரு, கொழும்பு)

76/3 கஸ்தூரியார் தெரு, :: கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

C 5 15—10—48.

## நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
# ஜெர்மன் "திறப்பு மார்க்கு" சீமெந்து
# ("KEY BRAND" CEMENT)

இம்மாதத்தில் - -
"INDIAN MERCHANT"
- - கப்பலில்



யாழ்ப்பாணத் - -
துறைமுகத்துக்கு
- - வருகிறது

## முன்பு யாழ்ப்பாணத்தில் திறமெனப் பெயர்பெற்ற சீமெந்து

வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில்
விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்

**இப்ருஹிம் ஜபர்ஜீ**
ஆஸ்பத்திரிரேட் : பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**Ibrahim Jafferjee**
Hospital Road
Grand Bazaar, Jaffna.

Std 8 4—1&31—1—49.



## சலரோகம்

அப்ரக் செந்தூரம் கைகண்ட மருந்து

புதுக்கோட்டைத் தலைமை வைத்திய அதிகாரியும், சுகாதார உத்தியோகத்தருமாகிய ஸ்ரீ ராவ்சாஹிப் Dr M. G. இராமச்சந்திரராவ் தெரிவிப்பதாவது:

"இம்மருந்தை ஒரு சாய்புவுக்குக் கொடுத்தபோது 15 நாட்களில் நீரிற் சர்க்கரைச் சத்து அறவே நீங்கிவிட்டது."

**20 வேளை 10 நாள் மருந்து ரூபா 10**

தோய்வு துய்மல் கசத்துக்கு சொர்ணகல்பம் ½ தோலா ரூபா 8—50

**Dr. K. S. பரிபூரணநந்தா**
Regd. Medical Practitioner, (Madras)
349, நாவலர் ரோட்டு :: :: யாழ்ப்பாணம்

Std 4 12-11—12-6—49


## பண்டித கலாசாலை யாழ்ப்பாணம்

பரமேசுவரக் கல்லூரியில் இக் கலாசாலை ஜனவரி மீ 31 உ திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

தமிழ் S. S. C. பரீக்ஷையில் தேறிய மாணவர்கள் இக் கலாசாலையிற் சேரத் தகுதியுள்ளவர்கள்.

மூன்று ஆண்டுகளில் தமிழில் பண்டித பரீக்ஷைக்கும் ஆங்கிலத்தில் S. S. C. பரீக்ஷைக்கும் ஆயத்தம் செய்தற்குரிய பாடத்திட்டத்தின்படி இக் கலாசாலை மாணவர்கள் பயிற்றப்படுவார்கள். பாலபண்டித வகுப்பும் நடத்தப்படும்.

இக்கலாசாலையிற் சேர விண்ணப்பம் செய்வோர் தங்கள் வயதைக் குறிப்பிட்டெழுத வேண்டும்.

சு. நடேசபிள்ளை
பரமேசுவரக் கல்லூரி அதிபர்

## மூன்று சகோதரிகளுக்கு இரட்டைக் குழந்தைகள்

கொட்டகொடா என்னும் இடத்தைச் சேர்ந்த திரு. டொன் ஹெந்திக் என்பவருடைய வீட்டில் மூன்று சோடி இரட்டைக் குழந்தைகள் இருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் ஆண் குழந்தைகள். திரு ஹெந்திக்கின் மனைவியினது சகோதரி முதலில் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். ஆறு மாதத்தின் பின் ஸ்ரீமதி ஹெந்திக்கும் பிறகு இரண்டு மாதத்தால் அவளது சகோதரியும் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றனர். இப்பொழுது ஒரே வீட்டில் மூன்று சகோதரிகளுக்கும் மூன்று சோடி இரட்டைக் குழந்தைகள் இருக்கிறார்கள்.


## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கச் சட்டக்கோவைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 00, 000 |

தலைமைக்காரியாலயம்:- பிரின்ஸ்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ட் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்லேஸ் வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி, திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்),நுவரெலியா, மட்டக்களப்பு.
யாழ்ப்பாணக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிரேட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை வதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் சொற்ப கமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடமொன்றுக்கு 1½ விகிதம் கேட்டவுடன் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்: அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.
பிறநாட்டுவ்வகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி,கொழும்பு.

இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் வஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு

Std. 54 1-8-48—30-7-49.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.


கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std 14 20-11-46—20-11-49



கல்கத்தா மோகன்புளூட்
## ஹார்மோனியக் கம்பனி



**சரசமான விலை ஆர்மோனியம் உறுதியான வேலை**

அன்பர்களே!
இக் கம்பனியில் நூதனமாகத் தயாரித்த பலவகை ஹார்மோனியங்களும் சுதிப்பெட்டிகளும விலைக்கிருக்கின்றன.

**எங்கள் கம்பெனியில் மியூசிக் வாத்தியக் கருவிகள் செய்வதில் கைதேர்ந்த தென்னிந்தியத் தொழிலாளரினால் செய்து கொடுக்கப்படும்**

சகோதர, சகோதரிகளே!
உங்கள் பழுதடைந்த வாத்தியக் கருவிகளை உடனே எங்கள் கம்பனிக்கு அனுப்புங்கள் புத்தம் புதிதுபோற் பழுது பார்த்துத் தருவோம். உத்தரவாதத்துடன்.

K. M. சர்மா
புரப்பிறயிற்றர்

இலுப்பைக்கப்புளியடி,
484 K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245. Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Friday January 21, 1949.